**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.21/2011**

**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ஜோதி | **Caste** | |
| **Husband Name** | : தினகரன் | **Calling** | துணை இயக்குநர் |
| **Village** | : | **Religion** | |
| **Taluk** | : சென்னை | **Age** | **54/2026** |
| | | **Dated :** | **24.02.2026** |

**24.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 **திருமதி.ஜோதி** பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2ம் எதிரிகள் ஆஜர் . 3, 4 தனியாக பிரிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் குடியிருந்து புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் துணை இயக்குநராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 08.10.2009ம் தேதி திண்டுக்கல் கனிம வளத்துறையில் உதவி புவியியலாளராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் நானும் கனிமவளத்துறை உதவி இயக்குநர் சொக்கலிங்கம் மற்றும் தனித்துணை வட்டாட்சியர் மீனாட்சி சுந்தரம் ஆகியோரிடம் GTN கல்லூரி அருகே

கனிமவள கடத்தல் தடுப்பு சம்பந்தமாக வாகனசோதனை மேற்கொண்டபோது செவந்தம்மாள் என்ற பெயருடன் உள்ள 3434 பதிவுஎண் கொண்ட லாரி எரியோடு - திண்டுக்கல் ரோட்டில் திண்டுக்கல் நோக்கி வந்த லாரியை சோதனை செய்ய நிறுத்தமுயன்றபோது லாரி நிற்காமல் வேகமாக சென்றது. நாங்கள் பயன்படுத்திய வாகனம் மூலம் லாரியை பின்தொடர்ந்து சென்று பாலம் அருகே குறுக்கே நிறுத்தி லாரியை நிறுத்த அறிவுறித்தினோம். அதில் இருந்த டிரைவர் லாரியில் இருந்து தப்பிச்சென்றுவிட்டார். லாரியில் பார்த்தபோது 2 யூனிட் மணல் இருந்தது. பின்பு எங்களது கார் டிரைவர் மூலம் லாரியை எடுத்துக்கொண்டு தாடிக்கொம்பு காவல்நிலையத்தில் ஒப்படைக்க வரும்போது இருசக்கர வாகனத்தில் தர்மருடன் இரு நபர்கள் வந்து எங்களை லாரியுடன் செல்வதை தடுத்தார்கள். மிரட்டினார்கள். அதனால் நடவடிக்கை எடுக்க உதவி இயக்குநர் புகார் அளித்தார் . போலிசார் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் சம்பவ இடத்திற்கு 8.10.2009 ம் தேதியன்று சென்று ஆய்வு செய்ததற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Mines and minerals act படி குற்றம் ஏதும் நடந்தால் அது சம்பந்தமாக உரிய அதிகாரி தான் உரிய அனுமதியோடு நீதிமன்ற உத்தரவு படி சம்பந்தப்பட்ட நபரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட வேண்டுமென்றால் சரிதான். எதிரிகள் தான் குற்றச் செயலில் ஈடுபட்டார்கள் என்பதற்கு அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். நானும் அல்லது எனது அதிகாரிகளோ சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரிதான்.

கைப்பற்றப்பட்ட மணலை அத்ததாட்சி மூலம் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். கைப்பற்றபட்ட மணலை ஆய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். சொன்ன நாள் தேதியில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் சம்பவ இடத்திற்கு சென்று மணலை கைப்பற்றவில்லை என்றாலும் அங்கு எதிரிகள் எந்த பிரச்சனை செய்யவில்லை என்றாலும் போலீஸ் அதிகாரி நிர்பந்தத்தின் படி சாட்சி வேண்டும் என்பதற்காக என்னை சாட்சியாக சேர்த்து இவ்வழக்கு தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.24 12:22:14 +0530

Judicial Magistrate No.II
Dindigul.